$$\Rightarrow \quad 5x_1 - x_3 = 0$$

என்ற நேரியச் சமப்படித்தான சமன்பாட்டை பெறுகிறோம். இதேபோல் ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் அணுக்கள் எண்ணிக்கைகளை ஒப்பிடக் கிடைப்பது,

$$8x_1 = 2x_4$$
$$\Rightarrow \quad 4x_1 - x_4 = 0,$$
$$2x_1 = 2x_3 + x_4$$
$$\Rightarrow \quad 2x_2 - 2x_3 - x_3 = 0.$$

சமன்பாடுகள் (2), (3), மற்றும் (4) என்பன 4 மாறிலிகளில் ஒரு நேரியச் சமன்படித்தான தொகுப்பை ஏற்படுத்துகின்றன.

விரிவுப்படுத்தப்பட்ட அணியானது,

$$[A|B] = \left[\begin{array}{cccc|c} 5 & 0 & -1 & 0 & 0 \\ 4 & 0 & 0 & -1 & 0 \\ 0 & 2 & -2 & -1 & 0 \end{array}\right]$$

காஸ்ஸியன் நீக்கல் முறையை பயன்படுத்த,

$$[A|B] \xrightarrow{R_1 \leftrightarrow R_2} \left[\begin{array}{cccc|c} 4 & 0 & 0 & -1 & 0 \\ 5 & 0 & -1 & 0 & 0 \\ 0 & 2 & -2 & -1 & 0 \end{array}\right]$$

$$\xrightarrow{R_2 \leftrightarrow R_3} \left[\begin{array}{cccc|c} 4 & 0 & 0 & -1 & 0 \\ 0 & 2 & -2 & -1 & 0 \\ 5 & 0 & -1 & 0 & 0 \end{array}\right]$$

$$\xrightarrow{R_3 \rightarrow 4R_3 - 5R_1} \left[\begin{array}{cccc|c} 4 & 0 & 0 & -1 & 0 \\ 0 & 2 & -2 & -1 & 0 \\ 0 & 0 & -4 & 5 & 0 \end{array}\right]$$

எனவே, $\rho(A) = \rho\,([A|B]) = 3 < 4 =$ மதிப்பிட வேண்டிய மாறிகளின் எண்ணிக்கை.

தொகுப்பானது ஒருங்கமைவு உடையது மற்றும் எண்ணற்ற தீர்வுகளைப் பெற்றிருக்கும்.

ஏறுபடி வடிவத்தில் நமக்குக் கிடைக்கும் சமான சமன்பாடுகள் $4x_1 - x_4 = 0$, $2x_2 - 2x_3 - x_4 = 0$, $-4x + 5x_4 = 0$.

எனவே ஒரு மாறியை பூச்சியமற்ற மெய் எண் பெறும் தன்னிச்சை மாறியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

$x_4 = t, t$ 0 என்க. பின்னோக்கி பிரதியிடல் முறையில் $x_3 = \frac{5t}{4}, x_2 = \frac{7t}{4}, x_1 = \frac{t}{4}$ எனப் பெறுகிறோம்.

x_1, x_2, x_3 மற்றும் x_4 என்பன மிகை முழுக்கள். எனவே $t = 4$ எனத் தேர்வு செய்கிறோம். எனவே, $x_1 = 1, x_2 = 7, x_3 = 5$ மற்றும் $x_4 = 4$ எனக் கிடைக்கிறது.

எனவே சமனாக்கப்பட்டச் சமன்பாடு

$C_5H_8 + 7O_2 \rightarrow 5CO_2 + 4H_2O$ ஆகும்.

கூடுதல் வினா - விடை

1 மதிப்பெண்

I. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளிலிருந்து சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. சமன்பாடுகளின் தொகுப்பு $x + y + z = 6$, $x + 2y + 3z = 14$ மற்றும் $2x + 5y + \lambda z = \mu$ $(\lambda, \mu \in \mathbb{R})$ ஒருங்கமைவுடன் ஒரே தீர்வை கொண்டிருக்க வேண்டும் எனில்

(1) $\lambda = 8$ (2) $\lambda = 8, \mu \neq 36$

(3) $\lambda \neq 8$ (4) இவற்றில் எதுவுமில்லை

[விடை : (3) $\lambda \neq 8$]

குறிப்பு : $\left[\begin{array}{ccc|c} 1 & 1 & 1 & 6 \\ 1 & 2 & 3 & 14 \\ 2 & 5 & \lambda & \mu \end{array}\right] \xrightarrow[R_3 \to R_3 - 2R_1]{R_1 \to R_2 - R_1} \left[\begin{array}{ccc|c} 1 & 1 & 1 & 6 \\ 0 & 1 & 2 & 8 \\ 0 & 3 & \lambda-2 & \mu-12 \end{array}\right]$

$$\xrightarrow{R_3 \to R_3 - 3R_2} \left[\begin{array}{ccc|c} 1 & 1 & 1 & 6 \\ 0 & 1 & 2 & 8 \\ 0 & 0 & \lambda-8 & \mu-36 \end{array}\right]$$

2. $x = cy + bz$, $y = az + cx$ மற்றும் $z = bx + ay$ என்ற சமன்பாட்டு தொகுப்பு வெளிப்படையற்ற தீர்வை கொண்டிருக்கும் எனில் ....

(1) $a^2 + b^2 + c^2 = 1$ (2) $abc \neq 1$

(3) $a + b + c = 0$ (4) $a^2 + b^2 + c^2 + 2abc = 1$

[விடை : (4) $a^2 + b^2 + c^2 + 2abc = 1$]

குறிப்பு : $\begin{vmatrix} 1 & -c & -b \\ c & -1 & a \\ b & a & -1 \end{vmatrix} = 0$

$\Rightarrow 1[1 - a^2] + c[-c - ab] - b[ac + b] = 0$

$\Rightarrow 1 - a^2 - c^2 - abc - abc - b^2 = 0$

3. A ஒரு 3×3 அணி மற்றும் B ஒரு சேர்ப்பு அணி $|B| = 64$ எனில் $|A| =$

(1) ± 2 (2) ± 4 (3) ± 8 (4) ± 12

[விடை : (3) ± 8]

குறிப்பு : $A^{-1} = \frac{1}{|A|} \text{adj } A = \frac{1}{|A|} B$

$$\begin{aligned} \Rightarrow \quad |A| A^{-1} &= B \\ \Rightarrow \quad |A|^3 |A^{-1}| &= |B| = 64 \\ \Rightarrow \quad |A|^2 &= 64 \\ \Rightarrow \quad |A| &= \pm 8 \end{aligned}$$

4. A^T ஆனது சதுர அணி Aயின் நிரை நிரல் மாற்று எனில்

(1) $|A| \neq |A^T|$ (2) $|A| = |A^T|$

(3) $|A| + |A^T| = 0$

(4) A ஒரு சமச்சீர் அணி எனில் மட்டும் $|A| = |A^T|$

[விடை : (2) $|A| = |A^T|$]

5. $2x + y = 4$, $x - 2y = 2$, $3x + 5y = 6$ என்ற சமன்பாட்டு தொகுப்பிற்கான தீர்வுகளின் எண்ணிக்கை

(1) 0 (2) 1

(3) 2 (4) எண்ணிலடங்காதது

[விடை : (2) 1]

குறிப்பு : $\left[\begin{array}{cc|c} 1 & -2 & 2 \\ 2 & 1 & 4 \\ 3 & 5 & 6 \end{array}\right] \xrightarrow[R_3 \to R_3 - 3R_2]{R_2 \to R_2 - 2R_1} \left[\begin{array}{cc|c} 1 & -2 & 2 \\ 0 & 5 & 0 \\ 0 & 11 & 0 \end{array}\right]$

$$\xrightarrow{R_3 \to R_3 - \frac{11}{5} R_2} \left[\begin{array}{cc|c} 1 & -2 & 2 \\ 0 & 5 & 0 \\ 0 & 0 & 0 \end{array}\right]$$

6. $|A| = 2$ எனுமாறு A ஒரு சதுர அணி, எந்த ஒரு மிகை முழு nக்கும் $|A^n| =$..............

(1) 0 (2) $2n$ (3) 2^n (4) n^2

[விடை : (3) 2^n]

குறிப்பு : $|A^n| = |A|\,|A| \ldots$ முறைகள்

$= (2)(2) \ldots$ முறைகள் $= 2^n$

7. A வரிசை n உடைய சதுர அணி எனில், $|\text{adj } A| =$ ....

(1) $|A|^{n-1}$ (2) $|A|^{n-2}$

(3) $|A|^n$ (4) எதுவுமில்லை

[விடை : (1) $|A|^{n-1}$]

குறிப்பு : $\text{adj } A = |A| A^{-1}$

$\Rightarrow \quad |\text{adj } A| = |A|^n |A^{-1}| = |A|^{n-1}$

8. சமன்பாடுகளின் தொகுப்பு $x + 2y - 3x = 2$, $(k + 3)\ z = 3$, $(2k + 1)\ y + z = 2$ ஒருங்கமைவு அற்றது எனில் k ஆனது

(1) $-3, -\frac{1}{2}$ (2) $-\frac{1}{2}$ (3) 1 (4) 2

[விடை : $(1) -3, -\frac{1}{2}$**]**

9. $A = \begin{pmatrix} \cos x & \sin x \\ -\sin x & \cos x \end{pmatrix}$ மற்றும் $A\ (\text{adj } A) = \lambda \begin{pmatrix} 1 & 0 \\ 0 & 1 \end{pmatrix}$ எனில் λ ஆனது

(1) $\sin x \cos x$ (2) 1

(3) 2 (4) எதுவுமில்லை

[விடை : (2) 1**]**

குறிப்பு : $A\ (\text{adj } A) = \begin{pmatrix} \cos x & \sin x \\ -\sin x & \cos x \end{pmatrix}\begin{pmatrix} \cos x & -\sin x \\ \sin x & \cos x \end{pmatrix} = \begin{pmatrix} 1 & 0 \\ 0 & 1 \end{pmatrix}$

10. A $m \times n$ வரிசையுடைய அணி எனில் $\rho(A)$ ....

(1) m (2) n

(3) $\leq (m,n)$- ன் மீச்சிறு

(4) $\geq (m,n)$- ன் மீச்சிறு

[விடை : (3) $\leq (m,n)$- ன் மீச்சிறு**]**

11. $x + 2y + 3z = 1$, $x - y + 4z = 0$, $2x + y + 7z = 1$ என்ற தொகுப்பிற்கு........

(1) ஒரே தீர்வு (2) இரண்டு தீர்வுகள்

(3) தீர்வு இல்லை

(4) எண்ணிக்கையற்ற தீர்வுகள்

[விடை : (4) எண்ணிக்கையற்ற தீர்வுகள்**]**

குறிப்பு : $\left[\begin{array}{ccc|c} 1 & 2 & 3 & 1 \\ 1 & -1 & 4 & 0 \\ 2 & 1 & 7 & 1 \end{array}\right] \xrightarrow[R_3 \to R_3 - 2R_1]{R_2 \to R_2 - R_1} \left[\begin{array}{ccc|c} 1 & 2 & 3 & 1 \\ 0 & -3 & 1 & -1 \\ 0 & -3 & 1 & -1 \end{array}\right]$

$\xrightarrow{R_3 \to R_3 - R_3} \left[\begin{array}{ccc|c} 1 & 2 & 3 & 1 \\ 0 & -3 & 1 & -1 \\ 0 & 0 & 0 & 0 \end{array}\right]$

12. $\rho(A) = \rho([A/B])$ = மதிப்பிட வேண்டிய மாறிகளின் எண்ணிக்கை, அத்தொகுப்பானது ....

(1) ஒருங்கமைவுடன் எண்ணிக்கையற்ற தீர்வுகளை கொண்டிருக்கும்

(2) ஒருங்கமைவுடையது

(3) ஒருங்கமைவற்றது

(4) ஒருங்கமைவுடன் ஒரே ஒரு தீர்வை கொண்டிருக்கும்.

[விடை : (4) ஒருங்கமைவுடன் ஒரே ஒரு தீர்வை கொண்டிருக்கும்**]**

13. பின்வருவனவற்றுள் தொடக்கநிலை உருமாற்றம் இல்லாதது எது?

(1) $R_i \leftrightarrow R_j$ (2) $R_i \to 2R_i + R_j$

(3) $C_j \to C_j + C_i$ (4) $R_i \to R_i + C_j$

[விடை : (4) $R_i \to R_i + C_j$**]**

14. $\rho(A) = r$ எனில் பின்வருவனவற்றுள் சரியானது எது?

(1) எல்லா n வரிசை சிற்றணிக்கோவையும் பூச்சியமாவதில்லை

(2) 'A' -ல் குறைந்தபட்சம் ஒரு r வரிசையுடைய பூச்சியமற்ற சிற்றணிக்கோவையாவது இடம் பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் அதைவிட அதிகமான வரிசை கொண்ட சிற்றணிக் கோவைகளின் மதிப்புகள் பூச்சிங்களாகயிருத்தல் வேண்டும்.

(3) 'A'-ல் குறைந்தபட்சம் ஒரு $(r+1)$ வரிசையுடைய சிற்றணிக்கோவையானது பூச்சியமாயிருத்தல் வேண்டும்.

(4) எல்லா $(r+1)$ வரிசைமற்றும் அதைவிட அதிகமான வரிசை கொண்ட சிற்றணிக் கோவைகளின் மதிப்புகள் பூச்சியங்களாகயிருத்தல் கூடாது.

[விடை : (2) 'A' -ல் குறைந்தபட்சம் ஒரு r வரிசையுடைய பூச்சியமற்ற சிற்றணிக்கோவையாவது இடம் பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் அதைவிட அதிகமான வரிசை கொண்ட சிற்றணிக் கோவைகளின் மதிப்புகள் பூச்சிங்களாகியிருத்தல் வேண்டும்.**]**

II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. ஒவ்வொரு சமபடித்தான தொகுப்பும் ....

(1) எப்பொழுதும் ஒருங்கமைவு உடையது

(2) வெளிப்படை தீர்வு மட்டுமே இருக்கும்

(3) எண்ணிக்கையற்ற தீர்வுகளை கொண்டிருக்கும்

(4) ஒருங்கமைவுடன் இருக்க தேவையில்லை

[விடை : (1) எப்பொழுதும் ஒருங்கமைவு உடையது**]**

2. $\rho(A) \neq \rho([A|B])$, எனில் தொகுப்பானது ....

(1) ஒருங்கமைவுடன் எண்ணிக்கையற்ற தீர்வுகளை கொண்டிருக்கும்

(2) ஒருங்கமைவுடன் ஒரே ஒரு தீர்வை கொண்டிருக்கும்

(3) ஒருங்கமைவுடையது

(4) ஒருங்கமைவற்றது

[விடை : (4) ஒருங்கமைவற்றது**]**

3. 3 மாறிகளை உடைய அசமபடித்தான நேரியச் சமன்பாடுகளின் தொகுப்பிற்கு $\rho(A) = \rho([A|B]) = 2$, எனில் தொகுப்பிற்கு.............

(1) ஒரே ஒரு தீர்வு

(2) ஒரு சாராமாறிக் குடும்பமாக தீர்வுகள் இருக்கும்

(3) இரு சாராமாறிக் குடும்பமாக தீர்வுகள் இருக்கும்

(4) ஒருங்கமைவற்றது

[விடை : (2) ஒரு சாராமாறிக் குடும்பமாக தீர்வுகள் இருக்கும்**]**

4. கிராமரின் விதியை பயன்படுத்த வேண்டுமெனில் ....

(1) $\Delta \neq 0$ (2) $\Delta = 0$

(3) $\Delta = 0, \Delta_x = 0$ (4) $\Delta_x = \Delta_y = \Delta_z = 0$

[விடை : (1) $\Delta \neq 0$**]**

5. ஒரு சமப்படித்தான தொகுப்பில் $\rho(A) = \rho([A|0])$ < மாறிகளின் எண்ணிக்கையெனில் தொகுப்பு கொண்டிருப்பது.............

(1) வெளிப்படை தீர்வு

(2) வெளிப்படையற்ற தீர்வுகள் மட்டும்

(3) தீர்வு இல்லை

(4) வெளிப்படை தீர்வு மற்றும் எண்ணிக்கையற்ற தீர்வுகள் **[விடை :** (4) வெளிப்படை தீர்வு மற்றும் எண்ணிக்கையற்ற தீர்வுகள்**]**

6. 3 மாறிகளை உடைய சமன்பாடுகளின் தொகுப்பில், $\Delta = 0$ மற்றும் Δ_x, Δ_y அல்லது Δ_z ல் ஒன்று பூச்சியமில்லையெனில் தொகுப்பானது ....

(1) ஒருங்கமைவுடையது

(2) ஒருங்கமைவற்றது

(3) ஒருங்கமைவுடன் தீர்வுகள் இரு சாராமாறிக் குடும்பமாக இருக்கும்

(4) ஒருங்கமைவுடன் தீர்வுகள் ஒரு சாரா மாறிக் குடும்பமாக இருக்கும்.

[விடை : (2) ஒருங்கமைவற்றது**]**

7. மூன்று மாறிகளில் அமைந்த நேரியச் சமன்பாட்டு தொகுப்பிற்கு $\rho(A) = \rho([A|B]) = 1$, எனில் தொகுப்பிற்கு ....

(1) ஒரே தீர்வு

(2) ஒருங்கமைவற்றது

(3) ஒருங்கமைவுடன் தீர்வுகள் இரு சாராமாறிக் குடும்பமாக இருக்கும்

(4) ஒருங்கமைவுடன் தீர்வுகள் ஒரு சாராமாறிக் குடும்பமாக இருக்கும்

[விடை : (3) ஒருங்கமைவுடன் தீர்வுகள் இரு சாராமாறிக் குடும்பமாக இருக்கும்**]**

8. $A = [2\ 0\ 1]$ எனில் AA^T -ன் தரம் ....

(1) 1 (2) 2 (3) 3 (4) 0

[விடை : (1) 1**]**

குறிப்பு : $AA^T = [2\ 0\ 1]\begin{bmatrix} 2 \\ 0 \\ 1 \end{bmatrix} = [5] \quad \therefore (AA^T) = 1$

9. A ஒரு பூச்சியமற்ற கோவை அணி எனில் $|A^{-1}|$=

(1) $\left|\frac{1}{A^2}\right|$ (2) $\frac{1}{|A|^2}$ (3) $\left|\frac{1}{A}\right|$ (4) $\frac{1}{|A|}$

[விடை : (4) $\frac{1}{|A|}$**]**

10. சதுர அணியின் உறுப்பு a_{ij} -ன் சிற்றணிக் கோவை M_{ij} மற்றும் இணைக்காரணி A_{ij} ஐ தொடர்புபடுத்துவது ....

(1) $A_{ij} = -M_{ij}$ (2) $A_{ij} = M_{ij}$

(3) $A_{ij} = (-1)^{i+j} M_{ij}$ (4) $A_{ij} = (-1)^{i-j} M_{ij}$

[விடை : (3) $A_{ij} = (-1)^{i+j} m_{ij}$**]**

III. பொருத்துக :

1.

	பட்டியல் - I		பட்டியல் - II
i.	$AX = 0$ -ன் வெளிப்படை தீர்வு	அ)	$\|A\| = 0$
ii.	$AX = 0$ -ன் வெளிப்படை யற்ற தீர்வு	ஆ)	வெளிப்படை யற்ற தீர்வுகள்
iii.	$\rho(A) = \rho[(A/0)] < n$	இ)	வெளிப்படை தீர்வு
iv.	$\rho(A) = \rho([A/0]) = n$	ஈ)	$\|A\| \neq 0$

சரியான பொருத்தமானது

	(i)	(ii)	(iii)	(iv)
(1)	அ	ஆ	இ	ஈ
(2)	ஆ	இ	ஈ	அ
(3)	அ	ஈ	ஆ	அ
(4)	இ	ஈ	அ	ஆ

[விடை : (2) i – ஆ ii – இ iii – ஈ iv – அ**]**

2.

	பட்டியல் - I		பட்டியல் - II
i.	$\rho(A) = \rho([A\|B]) = 3 =$ மாறிகளின் எண்ணிக்கை	அ)	ஒருங்கமைவுடன் தீர்வுகள் ஒரு சாராமாறிக் குடும்பமாக இருக்கும்
ii.	$\rho(A) = \rho[A\|B]) = 2 <$ மாறிகளின் எண்ணிக்கை	ஆ)	ஒருங்கமைவற்றது மற்றும் தீர்வு இல்லை
iii.	$\rho(A) = \rho[A\|B]) = 1 <$ மாறிகளின் எண்ணிக்கை	இ)	ஒரே தீர்வு
iv.	$\rho(A) \neq \rho([A\|B])$	ஈ)	ஒருங்கமைவுடன் தீர்வுகள் இரு சாராமாறிக் குடும்பமாக இருக்கும்.

சரியான பொருத்தமானது

	(i)	(ii)	(iii)	(iv)
(1)	இ	ஈ	அ	ஆ
(2)	அ	ஆ	ஈ	இ
(3)	இ	அ	ஈ	ஆ
(4)	இ	ஈ	அ	ஆ

[விடை : (3) i – இ ii – அ iii – ஈ iv – ஆ**]**

3. A ஒரு n வரிசையுடைய பூச்சியமற்ற கோவை அணி எனில்

பட்டியல் - I		பட்டியல் - II	
i.	$\|adj\ A\|$	அ)	$\|A\|^{(n-1)^2}$
ii.	$(adj\ A)^T$	ஆ)	$\|A\|^{n-1}$
iii.	$adj\ (adj\ A)$	இ)	$adj\ (A^T)$
iv.	$\|adj\ (adj\ A)\|$	ஈ)	$\|A\|^{n-2} \cdot A$

சரியான பொருத்தமானது

	(i)	(ii)	(iii)	(iv)
(1)	அ	ஆ	இ	ஈ
(2)	இ	ஈ	அ	ஆ
(3)	ஈ	அ	ஆ	இ
(4)	ஆ	இ	ஈ	அ

[விடை : (4) i – ஆ ii – இ iii – ஈ iv – அ]

4. A ஒரு n வரிசையுடைய பூச்சியமற்ற கோவை அணி எனில்

பட்டியல் - I		பட்டியல் - II	
i.	$(adj\ A)^{-1}$	அ)	$(adj\ B)\ (adj\ A)$
ii.	$(\lambda A)^{-1}$	ஆ)	$\lambda^{n-1}\ adj\ (A)$
iii.	$adj\ (\lambda A)$	இ)	$adj\ (A^{-1})$
iv.	$adj\ (AB)$	ஈ)	$\frac{1}{\lambda} A^{-1}$

சரியான பொருத்தமானது

	(i)	(ii)	(iii)	(iv)
(1)	இ	ஈ	ஆ	அ
(2)	அ	ஆ	இ	ஈ
(3)	ஆ	இ	ஈ	அ
(4)	இ	அ	ஆ	ஈ

[விடை : (1) i – இ ii – ஈ iii – ஆ 4 – அ]

5.

பட்டியல் - I		பட்டியல் - II	
i.	$(A^T)^{-1}$	அ)	A
ii.	$A\ (adj\ A)$	ஆ)	$(A^{-1})^T$
iii.	$(AB)^{-1}$	இ)	$\|A\|. I_n$
iv.	$(A^{-1})^{-1}$	ஈ)	$B^{-1} A^{-1}$

சரியான பொருத்தமானது

	(i)	(ii)	(iii)	(iv)
(1)	ஆ	இ	ஈ	அ
(2)	அ	ஆ	இ	ஈ
(3)	இ	ஈ	அ	ஆ
(4)	ஆ	அ	இ	ஈ

[விடை : (1) i – ஆ ii – இ iii – ஈ iv – அ]

IV. பொருத்தமில்லாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும் :

1. 3 × 4 அணியின் தரம் ....

(1) 1 ஆக இருக்கலாம்
(2) 2 ஆக இருக்கலாம்
(3) 3 ஆக இருக்கலாம்
(4) 4 ஆக இருக்கலாம்

[விடை : (4) 4 ஆக இருக்கலாம்]

குறிப்பு : [$\rho(A) \le (3, 4)$ -ன் மீச்சிறு
$\Rightarrow \rho(A) \le 3$ மேலும் 4 ஆக இருக்க முடியாது]

2. A சமச்சீர் எனில்

(1) $A^T = A$ (2) adj A சமச்சீர்
(3) $adj\ (A^T) = (adj\ A)^T$
(4) A செங்கோண அணி

குறிப்பு : [1, 2, 3 சமச்சீர் அணியின் பண்புகள்]

[விடை : (4) A செங்கோண அணி]

3. A ஒற்றைபடை வரிசையுடைய பூச்சியமற்ற கோவை அணி எனில்

(1) A ன் வரிசை $2m + 1$
(2) A ன் வரிசை $2m + 2$
(3) $|adj\ A|$ மிகை
(4) $|A| \neq 0$ **[விடை :** (2) A ன் வரிசை $2m + 2$]

குறிப்பு : $(2m + 2)$ இரட்டை படை

4. A ஒரு செங்கோண அணி எனில்

(1) $AA^T = A^TA = I$
(2) A ஒரு பூச்சியமற்ற கோவை
(3) $|A| = 0$ (4) $A^{-1} = A^T$

[விடை : (3) $|A| = 0$]

குறிப்பு : $|A| = 0$ என்பது செங்கோணத்திற்கு பொருந்தாது.

5. ஒரு அலகு அணியில் ஒரே ஒரு தொடக்க நிலை உருமாற்றத்தினால் கிடைக்கும் அணியானது

(1) சமனி அணி (2) தொடக்க நிலை அணி
(3) சதுர அணி
(4) சமனி அணிக்கு சமான அணி

[விடை : (1) சமனி அணி]

V. தவறான விடையை தேர்ந்தெடுக்க :

1. ஏறுபடி வடிவலி பின்வருவனவற்றுள் தவறானது எது ?

(1) A–ன் பூச்சிய நிரைகள் அனைத்தும் A–ன் அபூச்சிய நிரைகளுக்கு கீழ் இருக்க வேண்டும்.
(2) ஒவ்வொரு அபூச்சிய நிரையிலும் முதல் பூச்சியமற்ற உறுப்பு 1 ஆகும்.
(3) ஒவ்வொரு நிரையிலும் முதல் பூச்சியமற்ற உறுப்புக்கு முந்தைய பூச்சிய உறுப்புகளின் எண்ணிக்கை அதற்கு கீழுள்ள நிரைகளில் அம்மாதிரியான பூச்சியங்களின் எண்ணிக்கையை விட குறைவு
(4) இரண்டு நிரைகள் முதல் பூச்சியமற்ற உறுப்புக்கு முன் ஒரே அளவிலான பூச்சியங்களை கொண்டிருக்கும்.

[விடை : (4) இரண்டு நிரைகள் முதல் பூச்சியமற்ற உறுப்புக்கு முன் ஒரே அளவிலான பூச்சியங்களை கொண்டிருக்கும்.]

2. பின்வரும் தொடக்கநிலை உருமாற்றங்கள் பொருந்தாது எது?

(1) $R_i \to R_i + 2R_j$ (2) $C_i \to C_i - C_j$

(3) $R_i \to 7R_i + \frac{5}{3}R_j$ (4) $C_i \to C_i - R_j$

[விடை :(4) $C_i \to C_i - R_j$**]**

3. A ஒரு பூச்சியமற்ற கோவை அணி எனில் பின்வருவனவற்றுள் தவறானது.

(1) $(A^2)^{-1} = (A^{-1})^2$ (2) $|A^{-1}| = |A|^{-1}$

(3) $(A^T)^{-1} = (A^{-1})^T$ (4) $|A| \neq 0$

[விடை : (1) $(A^2)^{-1} = (A^{-1})^2$**]**

4. அணி $\begin{bmatrix} 5 & 10 & 3 \\ -2 & -4 & 6 \\ -1 & -2 & x \end{bmatrix}$ ஒரு பூச்சியக்கோவை அணி எனில் x -ன் மதிப்பானது.

(1) 3

(2) காண இயலாது

(3) x -ன் எல்லா மதிப்புகளுக்கும்

(4) x -ன் ஏதோ ஒரு மதிப்பு **[விடை :** (1) 3**]**

5. சமன்பாடு தொகுப்பிற்கான $2x + y - z = 7$, $x - 3y + 2z = 1$, $x + 3y - 3z = 5$ தீர்வுகளின் எண்ணிக்கை

(1) 0 (2) 3

(3) தீர்வு இல்லை

(4) ஒருங்கமைவற்றது **[விடை :** (2) 3**]**

2 மதிப்பெண்கள்

1. எந்த 2 × 2 அணிக்கும், A (adj A) = $\begin{bmatrix} 10 & 0 \\ 0 & 10 \end{bmatrix}$ எனில் |A| காண்க.

தீர்வு : கொடுக்கப்பட்ட $A(\text{adj } A) = \begin{bmatrix} 10 & 0 \\ 0 & 10 \end{bmatrix} = 10\begin{bmatrix} 1 & 0 \\ 0 & 1 \end{bmatrix}$ ...(1)

$A(\text{adj } A) = (\text{adj } A)A = |A|.I_2$ என அறிவோம் ...(2)

(1) மற்றும் (2)ஐ ஒப்பிட கிடைப்பது $|A| = 10$.

2. அணி Aக்கு, $A^3 = I$ எனில் A^{-1}காண்க.

தீர்வு : கொடுக்கப்பட்ட $A^3 = I$

முன்புறமாக A^{-1} ல் பெருக்க கிடைப்பது,

$$A^{-1}.A^3 = A^{-1}.I$$

$\Rightarrow (A^{-1}.A)A^2 = A^{-1}$ $[\because A^{-1}I = A^{-1}]$

$\Rightarrow I.A^2 = A^{-1}$ $[\because A^{-1}A = I]$

$\Rightarrow A^2 = A^{-1}$ $[\because I.A^2 = A^2]$

$\therefore A^{-1} = A^2$

3. $A^3 = I$ எனுமாறு A ஒரு சதுர அணி எனில் A ஒரு பூச்சியமற்ற கோவை அணி என நிறுவுக.

தீர்வு : கொடுக்கப்பட்ட $A^3 = I \Rightarrow |A^3| = |I|$

$\Rightarrow |A.A.A| = 1$

$\Rightarrow |A|.|A|.|A| = 1$

$\Rightarrow |A|^3 = 1$

$\therefore |A| \neq 0$

எனவே, A ஒரு பூச்சியமற்ற கோவை அணி

4. சமன்பாடுகளின் தொகுப்பு ஒருங்கமைவற்றது என நிறுவுக. $2x + 5y = 7$, $6x + 15y = 13$.

தீர்வு : விரிவுபடுத்தப்பட்ட அணி

$$[A|B] \left[\begin{array}{cc|c} 2 & 5 & 7 \\ 6 & 15 & 13 \end{array}\right] \xrightarrow{R_2 \to R_2 - 3R_1} \left[\begin{array}{cc|c} 2 & 5 & 7 \\ 0 & 0 & -8 \end{array}\right]$$

இங்கு $\rho(A) = 2$ மற்றும் $\rho([A|B]) = 3$

$\therefore \rho(a) \neq \rho([A|B])$

எனவே தொகுப்பு ஒருங்கமைவற்றது.

5. அணி $\begin{bmatrix} 3 & -1 & 1 \\ -15 & 6 & -5 \\ 5 & -2 & 2 \end{bmatrix}$ -ன் தரம் காண்க.

தீர்வு : $A = \begin{bmatrix} 3 & -1 & 1 \\ -15 & 6 & -5 \\ 5 & -2 & 2 \end{bmatrix}$ என்க.

இங்கு $|A| = \begin{vmatrix} 6 & -5 \\ -2 & 2 \end{vmatrix} + 1\begin{vmatrix} -15 & -5 \\ 5 & 2 \end{vmatrix} + 1\begin{vmatrix} -15 & 6 \\ 5 & -2 \end{vmatrix}$

$= 3(12 - 10) + 1(-30 + 25) + 1(30 - 30)$

$= 3(2) + 1(-5) + 0 = 6 - 5 = 1 \neq 0$

$\therefore$ A -ன் தரம் என்பது 3.

6. அணி $A = \begin{bmatrix} 4 & 5 & -6 & 1 \\ 7 & -3 & 0 & 8 \end{bmatrix}$ -ன் தரம் காண்க.

தீர்வு : $A = \begin{bmatrix} 4 & 5 & -6 & 1 \\ 7 & -3 & 0 & 8 \end{bmatrix}$

$$\xrightarrow{R_2 \to R_2 - 2R_1} \begin{bmatrix} 4 & 5 & -6 & 1 \\ -1 & -3 & 12 & 6 \end{bmatrix}$$

$$\xrightarrow{R_1 \leftrightarrow R_2} \begin{bmatrix} -1 & -3 & 12 & 6 \\ 4 & 5 & -6 & 1 \end{bmatrix}$$

$$\xrightarrow{R_1 + (-1)R_1} \begin{bmatrix} 1 & 13 & -12 & 6 \\ 4 & 5 & -6 & 1 \end{bmatrix}$$

$$\xrightarrow{R_2 \to R_2 - 4R_1} \begin{bmatrix} 1 & 13 & -12 & -6 \\ 0 & -47 & 42 & 25 \end{bmatrix}$$

சமான ஏறுபடி வடிவ அணியில் இரண்டு அபூச்சிய நிரைகள் உள்ளன.

$\therefore \rho(A) = 2$

7. $3x + y + 9z = 0$, $3x + 2y + 12z = 0$ மற்றும் $2x + y + 7z = 0$ என்ற சமன்பாட்டு தொகுப்பிற்கு வெளிப்படையற்ற தீர்வுகள் உள்ளன என காட்டுக.

தீர்வு : தொகுப்பின், அணி வடிவம்

$$\begin{bmatrix}3 & 1 & 9\\3 & 2 & 12\\2 & 1 & 7\end{bmatrix}\begin{bmatrix}x\\y\\z\end{bmatrix} = \begin{bmatrix}0\\0\\0\end{bmatrix}$$

AX = B இங்கு

$$A = \begin{bmatrix}3 & 1 & 9\\3 & 2 & 12\\2 & 1 & 7\end{bmatrix}, X = \begin{bmatrix}x\\y\\z\end{bmatrix}, B = \begin{bmatrix}0\\0\\0\end{bmatrix}$$

$$|A| = \begin{vmatrix}3 & 1 & 9\\3 & 2 & 12\\2 & 1 & 7\end{vmatrix} = 3\begin{vmatrix}2 & 12\\1 & 7\end{vmatrix} - 1\begin{vmatrix}3 & 12\\2 & 7\end{vmatrix} + 9\begin{vmatrix}3 & 2\\2 & 1\end{vmatrix}$$

$= 3(14 - 12) - 1(21 - 24) + 9(3 - 4)$

$= 3(2) - 1(-3) + 9(-1) = 6 + 3 - 9 = 9 - 9 = 0$

$|A| = 0$ எனில், சமபடித்தான சமன்பாடுகளின் தொகுப்பிற்கு வெளிப்படையற்ற தீர்வுகளும் உண்டு.

8. சமன்பாடுகள் $x + 2y + 2z = 0$, $x - 3y - 3z = 0$, $2x + y + kz = 0$ தொகுப்பிற்கு வெளிப்படையான தீர்வு மட்டுமே உண்டு எனில் k-ன் மதிப்பு காண்க.

தீர்வு : கொடுக்கப்பட்ட சமன்பாட்டு தொகுப்பிற்கான அணி வடிவம்

$$\begin{bmatrix}1 & 2 & 2\\1 & -3 & -3\\2 & 1 & k\end{bmatrix}\begin{bmatrix}x\\y\\z\end{bmatrix} = \begin{bmatrix}0\\0\\0\end{bmatrix}$$

$$AX = B \text{ இங்கு } A = \begin{bmatrix}1 & 2 & 2\\1 & -3 & -3\\2 & 1 & k\end{bmatrix}$$

சமபடித்தான சமன்பாடுகளின் தொகுப்பிற்கு வெளிப்படையான தீர்வுகள் மட்டுமே உண்டெனில் $|A| \neq 0$.

$$\therefore \begin{vmatrix}1 & 2 & 2\\1 & -3 & -3\\2 & 1 & k\end{vmatrix} \neq 0.$$

R_1 மூலம் விரிவுபடுத்த,

$$1\begin{vmatrix}-3 & -3\\1 & k\end{vmatrix} - 2\begin{vmatrix}1 & -3\\2 & k\end{vmatrix} + 2\begin{vmatrix}1 & -3\\2 & 1\end{vmatrix} \neq 0.$$

$\Rightarrow 1(-3k + 3) - 2(k + 6) + 2(1 + 6) \neq 0$

$\Rightarrow -3k + 3 - 2k - 12 + 14 \neq 0 \Rightarrow -5k + 5 \neq 0$

$\Rightarrow -5k \neq -5 \Rightarrow k \neq \dfrac{-5}{-5} = 1$

$\Rightarrow k \neq 1$

9. தீர்க்க : $2x - y = 3$, $5x + y = 4$ அணிகளை பயன்படுத்தி.

தீர்வு : சமன்பாடுகளை அணி வடிவத்தில் பின்வருமாறு எழுதலாம்.

$$\begin{pmatrix}2 & -1\\5 & 1\end{pmatrix}\begin{pmatrix}x\\y\end{pmatrix} = \begin{pmatrix}3\\4\end{pmatrix} \Rightarrow AX = B \text{ இங்கு}$$

$$A = \begin{pmatrix}2 & -1\\5 & 1\end{pmatrix}, X = \begin{pmatrix}x\\y\end{pmatrix}, B = \begin{pmatrix}3\\4\end{pmatrix}$$

$\therefore X = A^{-1}B$

$$|A| = \begin{vmatrix}2 & -1\\5 & 1\end{vmatrix} = 2 + 5 = 7 \neq 0$$

$$\therefore A^{-1} = \frac{1}{|A|} \text{ adj } A = \frac{1}{7}\begin{bmatrix}1 & 1\\-5 & 2\end{bmatrix}$$

$$\therefore X = \frac{1}{7}\begin{bmatrix}1 & 1\\-5 & 2\end{bmatrix}\begin{bmatrix}3\\4\end{bmatrix} = \frac{1}{7}\begin{bmatrix}3+4\\-15+8\end{bmatrix}$$

$$= \frac{1}{7}\begin{bmatrix}7\\-7\end{bmatrix} = \begin{bmatrix}1\\-1\end{bmatrix}$$

$\therefore$ தீர்வு கணம் $\{1, -1\}$

10. தீர்க்க : $6x - 7y = 16$, $9x - 5y = 35$ (கிராமரின் விதியை பயன்படுத்த).

தீர்வு :

$$\Delta = \begin{vmatrix}6 & -7\\9 & -5\end{vmatrix} = -30 + 63 = 33$$

$$\Delta_1 = \begin{vmatrix}16 & -7\\35 & -5\end{vmatrix} = -80 + 245 = 165$$

$$\Delta_2 = \begin{vmatrix}6 & 16\\9 & 35\end{vmatrix} = 210 - 144 = 66$$

$$\therefore x = \frac{\Delta_1}{\Delta} = \frac{165}{33} = 5$$

$$y = \frac{\Delta_2}{\Delta} = \frac{66}{33} = 2$$

$\therefore$ தீர்வு கணம் $\{5, 2\}$

3 மதிப்பெண்கள்

1. தீர்க்க : $2x + 3y = 10$, $x + 6y = 4$, கிராமரின் விதியை பயன்படுத்துக.

தீர்வு :

$$\Delta = \begin{vmatrix}2 & 3\\1 & 6\end{vmatrix} = 12 - 3 = 9 \neq 0$$

$$\Delta_1 = \begin{vmatrix}10 & 3\\4 & 6\end{vmatrix} = 60 - 12 = 48$$

$$\Delta_2 = \begin{vmatrix}2 & 10\\1 & 4\end{vmatrix} = 8 - 10 = -2$$

$$\therefore x = \frac{\Delta_1}{\Delta} = \frac{48}{9} = \frac{16}{3}$$

$$y = \frac{\Delta_2}{\Delta} = \frac{-2}{9}$$

$\therefore$ தீர்வு கணம் $\left\{\frac{16}{3}, \frac{-2}{9}\right\}$

2. t -ன் எம்மதிப்புக்க சமன்பாட்டு தொகுப்பானது $tx + 3y - z = 1,\ x + 2y + z = 2, - tx + y + 2z = - 1$ ஒரே ஒரு தீர்வை கொண்டிருக்காது?

தீர்வு : $\Delta = \begin{vmatrix} t & 3 & -1 \\ 1 & 2 & 1 \\ -t & 1 & 2 \end{vmatrix} = t\begin{vmatrix} 2 & 1 \\ 1 & 2 \end{vmatrix} - 3\begin{vmatrix} 1 & 1 \\ -t & 2 \end{vmatrix} - \begin{vmatrix} 1 & 2 \\ -t & 1 \end{vmatrix}$

$= t(4-1) - 3(2+t) - 1(1+2t)$

$= 3t - 6 - 3t - 1 - 2t = -7 - 2t$

தொகுப்பானது ஒரே ஒரு தீர்வை கொண்டிருக்க இயலாது எனில்

$\Delta = 0 \Rightarrow -7 - 2t = 0 \Rightarrow -2t = 7 \Rightarrow t = \frac{-7}{2}$

$\therefore t = \frac{-7}{2}$.

3. தீர்க்க : $3x + ay = 4,\ 2x + ay = 2,\ a \neq 0$ கிராமரின் விதியை பயன்படுத்தி

தீர்வு : $\Delta = \begin{vmatrix} 3 & a \\ 2 & a \end{vmatrix} = 3a - 2a = a$

$\Delta_1 = \begin{vmatrix} 4 & a \\ 2 & a \end{vmatrix} = 4a - 2a = 2a$

$\Delta_2 = \begin{vmatrix} 3 & 4 \\ 2 & 2 \end{vmatrix} = 6 - 8 = -2$

$\therefore x = \frac{\Delta_1}{\Delta} = \frac{2\cancel{a}}{\cancel{a}} = 2\ ;\ y = \frac{\Delta_2}{\Delta} = \frac{-2}{a}$

$\therefore$ தீர்வு கணம் $\{2, \frac{-2}{a}\}$

4. $(AB)^{-1} = B^{-1} A^{-1}$ சரிபார்க்க $A = \begin{bmatrix} 2 & 1 \\ 5 & 3 \end{bmatrix}$ மற்றும் $B = \begin{bmatrix} 4 & 5 \\ 3 & 4 \end{bmatrix}$.

தீர்வு : $AB = \begin{bmatrix} 2 & 1 \\ 5 & 3 \end{bmatrix}\begin{bmatrix} 4 & 5 \\ 3 & 4 \end{bmatrix} = \begin{bmatrix} 8+3 & 10+4 \\ 20+9 & 25+12 \end{bmatrix}$

$= \begin{bmatrix} 11 & 14 \\ 29 & 37 \end{bmatrix}$

$|AB| = \begin{bmatrix} 11 & 14 \\ 29 & 37 \end{bmatrix}$

$= 407 - 406 = 1 \neq 0$

$(AB)^{-1} = \frac{1}{|AB|} \text{adj}(AB)$

$= \frac{1}{1}\begin{bmatrix} 11 & 14 \\ 29 & 37 \end{bmatrix}$

$= \begin{bmatrix} 37 & -14 \\ -29 & 11 \end{bmatrix}$ ...(1)

$|A| = \begin{bmatrix} 2 & 1 \\ 5 & 3 \end{bmatrix} = 6 - 5 = 1$

$|B| = \begin{bmatrix} 4 & 5 \\ 3 & 4 \end{bmatrix} = 16 - 15 = 1$

$B^{-1} = \frac{1}{|B|} \text{adj } B = \begin{bmatrix} 4 & -5 \\ -3 & 4 \end{bmatrix}$

$A^{-1} = \frac{1}{|A|} \text{adj } A = \begin{bmatrix} 3 & -1 \\ -5 & 2 \end{bmatrix}$

$\therefore B^{-1}A^{-1} = \begin{bmatrix} 4 & -5 \\ -3 & 4 \end{bmatrix}\begin{bmatrix} 3 & -1 \\ -5 & 2 \end{bmatrix}$

$= \begin{bmatrix} 12+25 & -4-10 \\ -9-20 & 3+8 \end{bmatrix}$

$= \begin{bmatrix} 37 & -14 \\ -29 & 11 \end{bmatrix}$ ...(2)

(1) மற்றும் (2) விருந்து, $(AB)^{-1} = B^{-1} A^{-1}$

5. எந்த நிபந்தனையின் கீழ் அணி $\begin{bmatrix} 1 & 0 & 0 \\ 0 & h-2 & 2 \\ 0 & 0 & h+2 \\ 0 & 0 & 3 \end{bmatrix}$ இன் தரம் 3ஐ விட குறைவாக இருக்கும்?

தீர்வு : $A = \begin{bmatrix} 1 & 0 & 0 \\ 0 & h-2 & 2 \\ 0 & 0 & h+2 \\ 0 & 0 & 3 \end{bmatrix}$ என்க

A ன் தரம் 3 விட குறைவாக இருக்க வேண்டுமெனில் ஒவ்வொரு 3 வரிசையுடைய சிற்றணிக்கோவையும் பூச்சியமாக இருத்தல் வேண்டும்.

$\therefore \begin{vmatrix} 1 & 0 & 0 \\ 0 & h-2 & 0 \\ 0 & 0 & 3 \end{vmatrix} = 0$

$\Rightarrow 1\begin{vmatrix} h-2 & 0 \\ 0 & 3 \end{vmatrix} + 0 + 0 = 0 \Rightarrow 3(h-2) = 0$

$\Rightarrow h - 2 = 0 \Rightarrow h = 2.$

6. அணியின் தரம் காண்க $\begin{bmatrix} 4 & 4 & 0 & 3 \\ -2 & 3 & -1 & 5 \\ 1 & 4 & 8 & 7 \end{bmatrix}$.

தீர்வு : $A = \begin{bmatrix} 4 & 4 & 0 & 3 \\ -2 & 3 & -1 & 5 \\ 1 & 4 & 8 & 7 \end{bmatrix}$ என்க.

$$A \xrightarrow{R_1 \leftrightarrow R_3} \begin{bmatrix} 1 & 4 & 8 & 7 \\ -2 & 3 & -1 & 5 \\ 4 & 4 & 0 & 3 \end{bmatrix}$$

$$\xrightarrow[R_3 \to R_3 - 4R_1]{R_2 \to R_2 + 2R_1} \begin{bmatrix} 1 & 4 & 8 & 7 \\ 0 & 11 & 15 & 19 \\ 0 & -12 & -32 & -25 \end{bmatrix}$$

A ஏறுபடி வடிவில் உள்ளது மற்றும் 3 அபூச்சிய நிரைகள் உள்ளன.

$\therefore \rho(A) = 3.$

7. $(A^{-1})^T = (A^T)^{-1}$ சரிபார்க்க $A = \begin{bmatrix} -2 & -3 \\ 5 & -6 \end{bmatrix}$.

தீர்வு :

$$|A| = \begin{vmatrix} -2 & -3 \\ 5 & -6 \end{vmatrix} = 12 + 15 = 27$$

$$\therefore A^{-1} = \frac{1}{|A|} \text{ adj } A = \frac{1}{27}\begin{bmatrix} -6 & 3 \\ -5 & 2 \end{bmatrix}$$

$$(A^{-1})^T = \frac{1}{27}\begin{bmatrix} -6 & -5 \\ 3 & 2 \end{bmatrix} \quad ...(1)$$

$$A^T = \begin{bmatrix} -2 & 5 \\ -3 & -6 \end{bmatrix}$$

$$|A^T| = \begin{vmatrix} -2 & 5 \\ -3 & -6 \end{vmatrix} = 12 + 15 = 27$$

$$\therefore (A^T)^{-1} = \frac{1}{|A^T|} \text{ adj}(A^T) = \frac{1}{27}\begin{bmatrix} -6 & -5 \\ 3 & -2 \end{bmatrix} \quad ...(2)$$

(1) மற்றும் (2) லிருந்து, $(A^{-1})^T = (A^T)^{-1}$

8. தீர்க்க : $2x - 3y = 7$, $4x - 6y = 14$, காஸ் - ஜோர்டன் முறை மூலம்.

தீர்வு : சமன்பாட்டு தொகுப்பின் அணி வடிவம்

$$\begin{bmatrix} 2 & -3 \\ 4 & -6 \end{bmatrix}\begin{bmatrix} x \\ y \end{bmatrix} = \begin{bmatrix} 7 \\ 14 \end{bmatrix} \Rightarrow AX = B \text{ இங்கு}$$

$$A = \begin{bmatrix} 2 & -3 \\ 4 & -6 \end{bmatrix}, X = \begin{bmatrix} x \\ y \end{bmatrix} \text{ மற்றும் } B = \begin{bmatrix} 7 \\ 14 \end{bmatrix}$$

விரிவுபடுத்தப்பட்ட அணியை ஏறுபடி வடிவில் உருமாற்ற கிடைப்பது

$$[A|B] = \left[\begin{array}{cc|c} 2 & -3 & 7 \\ 4 & -6 & 14 \end{array}\right] \xrightarrow{R_2 \to R_2 - 2R_1} \left[\begin{array}{cc|c} 2 & -3 & 7 \\ 0 & 0 & 0 \end{array}\right]$$

இங்கு $\rho(A) = 1$, $\rho[A|B] = 1$

$\therefore \rho(A) = \rho[A|B] = 1 <$ மாறிகளின் எண்ணிக்கை, தொகுப்பு ஒருங்கமைவுடையது மற்றும் ஒரு சாராமாறிக் குடும்பமாக தீர்வுகள் இருக்கும்.

$\therefore y = t$, என பிரதியிட, இங்கு $t \in \mathbb{R}$

ஏறுபடி வடிவத்தை சமன்பாடுகளாக எழுத கிடைப்பது

$$\begin{aligned} 2x - 3y &= 7 \\ \therefore 2x - 3t &= 7 \\ \Rightarrow \quad 2x &= 7 + 3t \\ \Rightarrow \quad x &= \frac{1}{2}(7 + 3t) \end{aligned}$$

$\therefore$ தீர்வு கணம் $\{\frac{1}{2}(7 + 3t), t\}$ இங்கு $t \in \mathbb{R}$.

9. தீர்க்க : $x + y + 3z = 4$, $2x + 2y + 6z = 7$, $2x + y + z = 10$.

தீர்வு : விரிவுபடுத்தப்பட்ட அணி $[A|B] = \left[\begin{array}{ccc|c} 1 & 1 & 3 & 4 \\ 2 & 2 & 6 & 7 \\ 2 & 1 & 1 & 10 \end{array}\right]$

$$[A|B] \xrightarrow[R_3 \to R_3 - 2R_1]{R_2 \to R_2 - 2R_1} \left[\begin{array}{ccc|c} 1 & 1 & 3 & 4 \\ 0 & 0 & 0 & -1 \\ 0 & -1 & -5 & 2 \end{array}\right]$$

$$\xrightarrow{R_2 \leftrightarrow R_3} \left[\begin{array}{ccc|c} 1 & 1 & 3 & 4 \\ 0 & -1 & -5 & 2 \\ 0 & 0 & 0 & -1 \end{array}\right]$$

இங்கு $\rho(A) = 2$ [2 அபூச்சிய நிரைகள் மட்டும்]

மற்றும் $\rho([A|B]) = 3$ [3 அபூச்சிய நிரைகள் மட்டும்]

$\therefore \rho(A) \neq \rho([A|B])$

$\therefore$ தொகுப்பு ஒருங்கமைவற்றது.

10. அணியின் தரம் 2 எனில் $\begin{bmatrix} \lambda & -1 & 0 \\ 0 & \lambda & -1 \\ -1 & 0 & \lambda \end{bmatrix}$, λ-ன் மதிப்பு காண்க.

தீர்வு : கொடுக்கப்பட்ட $\begin{bmatrix} \lambda & -1 & 0 \\ 0 & \lambda & -1 \\ -1 & 0 & \lambda \end{bmatrix}$ தரம் என்பது 2

$\Rightarrow$ மூன்றாம் வரிசை அணியின் தரம் பூச்சியம்

$$\Rightarrow \begin{vmatrix} \lambda & -1 & 0 \\ 0 & \lambda & -1 \\ -1 & 0 & \lambda \end{vmatrix} = 0$$

$$\Rightarrow \lambda \begin{vmatrix} \lambda & -1 \\ 0 & \lambda \end{vmatrix} + 1 \begin{vmatrix} 0 & -1 \\ -1 & \lambda \end{vmatrix} + 0 = 0$$

$$\Rightarrow \lambda(\lambda^2 - 0) + 1(0-1) = 0$$

$$\Rightarrow \lambda^3 - 1 = 0 \Rightarrow \lambda^3 = 1 \Rightarrow \lambda = 1$$

$$\therefore \lambda = 1$$

5 மதிப்பெண்கள்

1. அணிக்கோவையை பயன்படுத்தி, $f(1) = 0$, $f(2) = -2$ மற்றும் $f(3) = -6$ எனில் $f(x) = ax^2 + bx + c$, என்ற ஈருறுப்பு கோவையை காண்க.

தீர்வு : கொடுக்கப்பட்ட $f(x) = ax^2 + bx + c$

$$f(1) = 0$$

$$\Rightarrow a(1)^2 + b(1) + c = 0$$

$$\Rightarrow a + b + c = 0 \quad ...(1)$$

$$f(2) = -2$$

$$\Rightarrow a(2^2) + b(2) + c = -2$$

$$\Rightarrow 4a + 2b + c = -2 \quad ...(2)$$

$$f(3) = -6$$

$$\Rightarrow a(3^2) + b(3) + c = -6$$

$$\Rightarrow 9a + 3b + c = -6 \quad ...(3)$$

$$\Delta = \begin{vmatrix} 1 & 1 & 1 \\ 4 & 2 & 1 \\ 9 & 3 & 1 \end{vmatrix} = 1\begin{vmatrix} 2 & 1 \\ 3 & 1 \end{vmatrix} - 1\begin{vmatrix} 4 & 1 \\ 9 & 1 \end{vmatrix} + 1\begin{vmatrix} 4 & 2 \\ 9 & 3 \end{vmatrix}$$

$$= 1(2-3) - 1(4-9) + 1(12-18)$$

$$= -1 + 5 - 6 = -2 \neq 0$$

$$\Delta_1 = \begin{vmatrix} 0 & 1 & 1 \\ -2 & 2 & 1 \\ -6 & 3 & 1 \end{vmatrix} = 0 - 1\begin{vmatrix} -2 & 1 \\ -6 & 1 \end{vmatrix} + 1\begin{vmatrix} -2 & 2 \\ -6 & 3 \end{vmatrix}$$

$$= -1(-2+6) + 1(-6+12) = -1(4) + 1(6) = 2$$

$$\Delta_2 = \begin{vmatrix} 1 & 0 & 1 \\ 4 & -2 & 1 \\ 9 & -6 & 1 \end{vmatrix} = 1\begin{vmatrix} -2 & 1 \\ -6 & 1 \end{vmatrix} + 0 + 1\begin{vmatrix} 4 & -2 \\ 9 & -6 \end{vmatrix}$$

$$-1(-2+6) + 1(-24+18) = 4 - 6 = -2$$

$$\Delta_3 = \begin{vmatrix} 1 & 1 & 0 \\ 4 & 2 & -2 \\ 9 & 3 & -6 \end{vmatrix} = 1\begin{vmatrix} 2 & -2 \\ 3 & -6 \end{vmatrix} - 1\begin{vmatrix} 4 & -2 \\ 9 & -6 \end{vmatrix}$$

$$= 1(-12+6) - 1(-24+18) = -6 + 6 = 0$$

$\therefore$ கிராமரின் விதியை பயன்படுத்தி,

$$a = \frac{\Delta_1}{\Delta} = \frac{2}{-2} = -1$$

$$b = \frac{\Delta_2}{\Delta} = \frac{-2}{-2} = 1$$

$$c = \frac{\Delta_3}{\Delta} = \frac{0}{-2} = 0$$

$$\therefore f(x) = (-1)x^2 + 1x + 0$$

$$\Rightarrow f(x) = x^2 + x$$

2. தீர்க்க :

$$\frac{2}{x} + \frac{3}{y} + \frac{10}{z} = 4, \ \frac{4}{x} - \frac{6}{y} + \frac{5}{z} = 1, \ \frac{6}{x} + \frac{9}{y} - \frac{20}{z} = 2$$

தீர்வு : $\frac{1}{x} = a, \ \frac{1}{y} = b, \ \frac{1}{z} = c$

எனக் கொடுக்கப்பட்டால்

$$\therefore 2a + 3b + 10c = 4 \quad ...(1)$$

$$4a - 6b + 5c = 1 \quad ...(2)$$

$$6a + 9b - 20c = 2 \quad ...(3)$$

$$\Delta = \begin{vmatrix} 2 & 3 & 10 \\ 4 & -6 & 5 \\ 6 & 9 & -20 \end{vmatrix}$$

$$= 2\begin{vmatrix} -6 & 5 \\ 9 & -20 \end{vmatrix} - 3\begin{vmatrix} 4 & 5 \\ 6 & -20 \end{vmatrix} + 10\begin{vmatrix} 4 & -6 \\ 6 & 9 \end{vmatrix}$$

$$= 2(120-45) - 3(-80-30) + 10(36+36)$$

$$= 150 + 330 + 720 = 1200$$

$$\Delta_1 = \begin{vmatrix} 4 & 3 & 10 \\ 1 & -6 & 5 \\ 2 & 9 & -20 \end{vmatrix}$$

$$= 4\begin{vmatrix} -6 & 5 \\ 9 & -20 \end{vmatrix} - 3\begin{vmatrix} 1 & 5 \\ 2 & -20 \end{vmatrix} + 10\begin{vmatrix} 1 & -6 \\ 2 & 9 \end{vmatrix}$$

$$= 4(120-45) - 3(-20-10) + 10(9+12)$$

$$= 300 + 90 + 120 = 600$$

$$\Delta_2 = \begin{vmatrix} 2 & 4 & 10 \\ 4 & 1 & 5 \\ 6 & 2 & -20 \end{vmatrix} = 2\begin{vmatrix} 1 & 5 \\ 2 & -20 \end{vmatrix} - 4\begin{vmatrix} 4 & 5 \\ 6 & -20 \end{vmatrix} + 10\begin{vmatrix} 4 & 1 \\ 6 & 2 \end{vmatrix}$$

$$= 2(-2-10) - 4(-80-30) + 10(8-6)$$

$$= -60 + 440 + 20 = 400$$

$$\Delta_3 = \begin{vmatrix} 2 & 3 & 4 \\ 4 & -6 & 1 \\ 6 & 9 & 2 \end{vmatrix} = 2\begin{vmatrix} -6 & 1 \\ 9 & 2 \end{vmatrix} - 3\begin{vmatrix} 4 & 1 \\ 6 & 2 \end{vmatrix} + 4\begin{vmatrix} 4 & -6 \\ 6 & 9 \end{vmatrix}$$

$$= 2(-12-9) - 3(8-6) + 4(36+36)$$

$$= -42 - 6 + 288 = 240$$

$$\therefore a = \frac{\Delta_1}{\Delta} = \frac{600}{1200} = \frac{1}{2} \Rightarrow \frac{1}{x} = \frac{1}{2} \Rightarrow x = 2$$

$$\therefore b = \frac{\Delta_2}{\Delta} = \frac{400}{1200} = \frac{1}{3} \Rightarrow \frac{1}{y} = \frac{1}{3} \Rightarrow y = 3$$

$$\therefore c = \frac{\Delta_3}{\Delta} = \frac{240}{1200} = \frac{1}{5} \Rightarrow \frac{1}{z} = \frac{1}{5} \Rightarrow z = 5$$

$\therefore$ தீர்வு கணம் $\{2, 3, 5\}$

3. மூன்று எண்களின் கூடுதல் 20. மூன்றாவது எண்ணை 2 ஆல் பெருக்கி முதல் எண்ணுடன் கூட்ட கிடைப்பது 23. இரண்டு மற்றும் மூன்றாவது எண்ணை முதல் எண்ணின் மூன்று மடக்குடன் கூட்ட கிடைப்பது 46. கிராமரின் விதியை பயன்படுத்தி எண்களை காண்க.

தீர்வு : தேவையான எண்களை x, y மற்றும் z என்க.

கொடுக்கப்பட்ட தரவின் படி,

$$x + y + z = 20 \quad ...(1)$$

$$2z + x = 23 \Rightarrow x + 2z = 23 \quad ...(2)$$

$$y + z + 3x = 46 \Rightarrow 3x + y + z = 46 \quad ...(3)$$

$$\Delta = \begin{vmatrix} 1 & 1 & 1 \\ 1 & 0 & 2 \\ 3 & 1 & 1 \end{vmatrix} = 1\begin{vmatrix} 0 & 2 \\ 0 & 1 \end{vmatrix} - 1\begin{vmatrix} 1 & 2 \\ 1 & 1 \end{vmatrix} + 1\begin{vmatrix} 1 & 0 \\ 3 & 1 \end{vmatrix}$$

$$= -2 + 5 + 1 = 4$$

$$\Delta_1 = \begin{vmatrix} 20 & 1 & 1 \\ 23 & 0 & 2 \\ 46 & 1 & 1 \end{vmatrix} = 20\begin{vmatrix} 0 & 2 \\ 1 & 1 \end{vmatrix} - 1\begin{vmatrix} 23 & 2 \\ 46 & 1 \end{vmatrix} + 1\begin{vmatrix} 23 & 0 \\ 46 & 1 \end{vmatrix}$$

$$= -40 + 69 + 23 = 52$$

$$\Delta_2 = \begin{vmatrix} 1 & 20 & 1 \\ 1 & 23 & 2 \\ 3 & 46 & 1 \end{vmatrix}$$

$$= 1\begin{vmatrix} 23 & 2 \\ 46 & 1 \end{vmatrix} - 20\begin{vmatrix} 1 & 2 \\ 3 & 1 \end{vmatrix} + 1\begin{vmatrix} 1 & 23 \\ 3 & 46 \end{vmatrix}$$

$$= -69 + 100 - 23 = 8$$

$$\Delta_3 = \begin{vmatrix} 1 & 1 & 20 \\ 1 & 0 & 23 \\ 3 & 1 & 46 \end{vmatrix}$$

$$= 1\begin{vmatrix} 0 & 23 \\ 1 & 46 \end{vmatrix} - 1\begin{vmatrix} 1 & 23 \\ 3 & 46 \end{vmatrix} + 20\begin{vmatrix} 1 & 0 \\ 3 & 1 \end{vmatrix}$$

$$= -23 + 23 + 20 = 20$$

$$\therefore x = \frac{\Delta_1}{\Delta} = \frac{52}{4} = 13$$

$y = \dfrac{\Delta_2}{\Delta} = \dfrac{8}{4} = 2$ மற்றும் $z = \dfrac{\Delta_3}{\Delta} = \dfrac{20}{4} = 5.$

எனவே கொடுக்கப்பட்ட எண்கள் 13, 2 மற்றும் 5.

4. சமன்பாடு தொகுப்பு $x + y + z = 1, x + 2y + 4z = \lambda$, $x + 4y + 10z = \lambda^2$ ஒருங்கமைவுடையது எனில் λ-ன் மதிப்பை காண்க.

தீர்வு : விரிவுபடுத்தப்பட்ட அணி $=[A|B]= \left[\begin{array}{ccc|c} 1 & 1 & 1 & 1 \\ 1 & 2 & 4 & \lambda \\ 1 & 4 & 10 & \lambda^2 \end{array}\right]$

$$[A|B] = \xrightarrow[R_3 \to R_3 - R_1]{R_2 \to R_2 - R_1} \left[\begin{array}{ccc|c} 1 & 1 & 1 & 1 \\ 0 & 1 & 3 & \lambda - 1 \\ 0 & 3 & 9 & \lambda^2 - 1 \end{array}\right]$$

$$\xrightarrow{R_3 \to R_3 - 3R_2} \left[\begin{array}{ccc|c} 1 & 1 & 1 & 1 \\ 0 & 1 & 3 & \lambda - 1 \\ 0 & 0 & 0 & \lambda^2 - 1 - 3\lambda + 3 \end{array}\right]$$

$$\to \left[\begin{array}{ccc|c} 1 & 1 & 1 & 1 \\ 0 & 1 & 3 & \lambda - 1 \\ 0 & 0 & 0 & \lambda^2 - 3\lambda + 2 \end{array}\right]$$

இங்கு $\rho(A) = 2$

கொடுக்கப்பட்ட தொகுப்பு ஒருங்கமைவுடையது எனில் $\rho([A|B]) = 2$

$\rho([A|B]) = 2$ மட்டும் எனில் $\lambda^2 - 3\lambda + 2 = 0$

$\Rightarrow (\lambda - 1)(\lambda - 2) = 0 \Rightarrow \lambda = 1$ அல்லது $\lambda = 2$

$\therefore$ கொடுக்கப்பட்ட தொகுப்பு ஒருங்கமைவு உடையது எனல் λ -ன் மதிப்புகள் 1 மற்றும் 2 மட்டும்.

5. $2x + y + z = a, x - 2y + z = b, x + y - 2z = c$ ஒருங்கமைவுடையது எனில் மட்டும் $a + b + c = 0$ என காட்டுக.

தீர்வு : பிரிவுபடுத்தப்பட்ட அணி $[A|B]$ is $\left[\begin{array}{ccc|c} -2 & 1 & 1 & a \\ 1 & -2 & 1 & b \\ 1 & 1 & -2 & c \end{array}\right]$

$$[A|B] \xrightarrow{R_1 \leftrightarrow R_2} \left[\begin{array}{ccc|c} 1 & -2 & 1 & b \\ -2 & 1 & 1 & a \\ 1 & 1 & -2 & c \end{array}\right]$$

$$\xrightarrow[R_3 \to R_3 - R_1]{R_2 \to R_2 + 2R_1} \left[\begin{array}{ccc|c} 1 & -2 & 1 & b \\ 0 & -3 & 3 & a + 2b \\ 0 & 3 & -3 & c - b \end{array}\right]$$

$$\xrightarrow{R_3 \to R_3 + R_2} \left[\begin{array}{ccc|c} 1 & -2 & 1 & b \\ 0 & -3 & 3 & c + 2b \\ 0 & 0 & 0 & a + b + c \end{array}\right]$$

இங்கு $\rho(A) = 2$

கொடுக்கப்பட்ட தொகுப்பு ஒருங்கமைவுடன் உள்ளது எனில் மட்டும் $\rho([A|B]) = 2$ $\rho([A|B]) = 2$ எனில் மட்டும் $a + b + c = 0$

எனவே நிரூபிக்கப்பட்டது.

6. காஸ்-ஜோர்டன்முறையைபயன்படுத்தி, λ,μ-இன் எம்மதிப்புகளுக்கு $2x-3y+5z=12, 3x+y+\lambda z=\mu$, $x-7y+8z=17$ (i) ஒரே ஒரு தீர்வை பெற்றிருக்கும் (ii) எண்ணிக்கையற்ற தீர்வுகளை பெற்றிருக்கும் (iii) யாதொரு தீர்வும் பெற்றிராது என்பதனை ஆராய்க.

தீர்வு : விரிவுபடுத்தப்பட்ட அணி $[A/B] = \left[\begin{array}{ccc|c} 2 & -3 & 5 & 12 \\ 3 & 1 & \lambda & \mu \\ 1 & -7 & 8 & 17 \end{array}\right]$

$$\xrightarrow{R_1 \leftrightarrow R_3} \left[\begin{array}{ccc|c} 1 & -7 & 8 & 17 \\ 3 & 1 & \lambda & \mu \\ 2 & -3 & 5 & 12 \end{array}\right]$$

$$\xrightarrow[R_3 \to R_3 - 2R_1]{R_2 \to R_2 - 3R_1} \left[\begin{array}{ccc|c} 1 & -7 & 8 & 17 \\ 0 & 22 & \lambda - 51 & \mu - 51 \\ 0 & 11 & -11 & -22 \end{array}\right]$$

$$\xrightarrow[R_3 \to R_3 \div 11]{R_2 \to R_2 - 2R_3} \left[\begin{array}{ccc|c} 1 & -7 & 8 & 17 \\ 0 & 0 & \lambda - 2 & \mu - 7 \\ 0 & 1 & -1 & -2 \end{array}\right]$$

$$\xrightarrow{R_2 \leftrightarrow R_3} \left[\begin{array}{ccc|c} 1 & -7 & 8 & 17 \\ 0 & 1 & -1 & -2 \\ 0 & 0 & \lambda - 2 & \mu - 7 \end{array}\right]$$

நிலை (i) $\lambda \neq 2$ எனில்,

$\rho([A|B]) = 3$ மற்றும் $\rho(A) = 3$

$\therefore \rho([A|B]) = \rho(A) = 3 =$ மாறிகளின் எண்ணிக்கை

$\therefore$ ஒரே ஒரு தீர்வை கொண்டிருக்கும்

நிலை (ii) $\lambda = 2$ எனில் $\mu = 7$,

$$[A|B] = \left[\begin{array}{ccc|c} 1 & -7 & 8 & 17 \\ 0 & 1 & -1 & -2 \\ 0 & 0 & 0 & 0 \end{array}\right]$$

இங்கு $\rho(A) = 2$ மற்றும் $\rho([A|B]) = 2$

$\therefore \rho(A) = \rho([A|B]) = 2 <$ மாறிகளின் எண்ணிக்கை

தொகுப்பு ஒருங்கமைவுடன் எண்ணிக்கையற்ற தீர்வுகளை கொண்டிருக்கும்.

நிலை (iii) $\lambda = 2$ மற்றும் $\mu \neq 7$ எனில் மட்டும்

$\rho(A) = 2$ மற்றும் $\rho([A|B]) = 3$

$\therefore \rho(A) \neq \rho([A|B])$

ஆகையால், கொடுக்கப்பட்ட சமன்பாடுகளின் தொகுப்பு ஒருங்கமைவற்றது.

❀❀❀❀❀